*கவனிக்க.*-2021.12.10 ஆந் திகதிய 2258 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி I: தொகுதி III மற்றும் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2259 - 2021 දෙසැම්බර් මස 17 වැනි සිකුරාදා - 2021.12.17

*2259ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி II – சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| சட்டமூலங்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | 332 |
| மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | 333 |
| நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


## வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2022, சனவரி மாதம் 07ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, திசெம்பர் மாதம் 24ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

### 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

331 - B 082297 - 353 (2021/11)

# பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள்

**5124/MB ஆம் இலக்க வழக்குடன் தொடர்புடைய சிலாபம் மாவட்ட நீதிமன்றின் 11/2021 ஆம் இலக்கத்தின் கீழ் பிஸ்கல் மூலம் செய்யப்படுகின்ற பிரசித்த ஏல விற்பனை**

பெறுமதியான ஆதனம் ஒன்றினை பிரசித்த ஏல விற்பனை மூலம் விற்பனை செய்தல்

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், சிலாபம் காணிப் பதிவகப் பிரிவிற்கு உட்பட்ட ஆனவிலுந்தான் பத்துவ, ஆரச்சிக்கட்டுவ பிரதேச சபை எல்லைக்குள் அமைந்துள்ள, ஆரச்சிக்கட்டுவ பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட, அந்தனன் கட்டுவ கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்டு அமைந்துள்ள “வெவ இஹலகெலே” என்ற காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் திரு. எம். கே. மஞ்சு ஸ்ரீ பிரியங்கர அவர்களால் 2012.03.02 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 1783 ஆம் இலக்க வரைபடத்தின் 01 A 1 ஆம் இலக்க காணிக்கான எல்லைகள்.-

வடக்கு: பிரதேச சபைப் பாதை;
கிழக்கு: மேற்கண்ட வரைபடத்தின் 1 A 02 இலக்கமுடைய 10 அடி அகலப்பாதை;
தெற்கு:உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ.ஜி.எஸ் .பி பராக்கிரம அவர்களின் 1477 ஆம் இலக்க வரைபடத்தின் 01 B என்று அடையாளம் இடப்பட்ட 10 அடி அகலப் பாதை;
மேற்கு: 10 அடி அகலப் பாதை.

என்ற எல்லைகளுக்கு உட்பட்ட ஒரு றூட், முப்பத்தி ஆறு தசம் ஐந்து பூச்சியம் பேர்ச்( 0ஏ.01றூ.36.50பே.) விஸ்தீரணமுள்ள காணியும் அதனுள் அமைந்துள்ள மரம், செடி, கொடி, பழவகை, கட்டிடங்கள் உட்பட அனைத்தும்.

காணியின் அளவு( 0ஏ.01றூ.36.50பே.) இது சிலாபம் காணிப் பதிவகத்தில் R 82/75 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**ஆதனத்திற்குச் செல்லும் பாதை.-** சிலாபம் நகரிலிருந்து 15 கிலோ மீற்றர் செல்லும் போது அகப்படும் ஆரச்சிக்கட்டுவ சந்தியின் இடது பக்கமாக இருக்கும் அடிப்பல பாதையின் 2.5 கிலோ மீற்றர் அளவு சென்றவுடன் அடிப்பல தபால் அலுவலகத்தை தாண்டி மேலே செல்லும் போது அடிப்பல பன்சலையும் வயலும் அகப்படும். அதைத் தாண்டிச் செல்லும் போது தார் பாதையின் இடது பக்கமாக விசாலமான தேக்கு மரங்கள் அடங்கிய தோட்டம் அகப்படும். அந்த தேக்கு தோட்டம் ( அடிப்பல பாடசாலையின் முன்பாக ) இடதுபக்கமாக அமைந்துள்ள கிரவல் பாதையில் மீண்டும் இடது பக்கமாக எல்லையைத் தாண்டும் போது பாதையின் இடது பக்கமாக அமைந்துள்ள இரண்டாவது ஆதனம் குறிப்பிட்ட ஆதனம் ஆகும். ( ஆரச்சிக்கட்டுவையிலிருந்து சுமார் 7 கிலோ மீற்றர் ஆகும்.

2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 21 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள இடத்தில் பிரதிபிஸ்கால் மூலம் ஏலவிற்பனை செய்யப்படும்.

**பணம் செலுத்தும் முறை.-** ஏல விற்பனையின் இறுதியில் ஆதனத்தை வாங்கியவர் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பணமாகச் செலுத்தல் வேண்டும்.-

(1) கொள்வனவு விலையில் 25% (நூற்றுக்கு இருபத்தைந்து சதவீதம்);
(2) மாகாண அதிகார சபைக்குச் செலுத்த வேண்டிய 1 % (நூற்றுக்கு ஒன்று விற்பனை வரி);
(3) பிஸ்கல் கமிஷன் , சிவில் நடைமுறைச் சட்டத்தின் 258 ஆம் பிரிவின் பிரகாரம் பிஸ்கல் கமிஷன் ;
(4) அனைத்து விளம்பரக் கட்டணங்கள்;
(5) எழுதுவினைஞர் அறிவிப்பாளர் கட்டணமாக ரூபா 500;
(6) விற்பனைச் செலவுகள் வேறு கட்டணங்கள் ஏதுமிருப்பின் அந்தக் கட்டணம்;
(7) விற்பனை அத்தாட்சிப் பத்திரத்துக்கான முத்திரைக் கட்டணம் .

* குறிப்பிட்ட ஆதனத்தின் விற்பனை நீதிமன்றின் அங்கீகாரத்துடன் நடைபெறுகின்றது.

வாங்கிய விலையின் மிகுதி 75% (நூற்றுக்கு எழுபத்தைந்து ) வீத பணத்தை விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வழக்கின் கணக்கில் வைப்புச் செய்யப்படல் வேண்டும்.
மேற்கண்டவாறு பணத்தை 30 நாட்களுக்குள் மேற்குறிப்பிடப்பட்ட முழுத்தொகையையும் செலுத்தாவிடின் ஏற்கனவே செலுத்திய பணத்தை திருப்பிச் செலுத்தாமல் விடவும், மீண்டும் ஆதனத்தை ஏல விற்பனையின் மூலம் விற்பனை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

உரிமைப் பத்திரம் மற்றும் வேறு விபரங்களை பரிசீலிப்பதற்கும் மேலதிக விபரங்களையும் பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி , பிராந்திய பிரதான அலுவலகம், மக்கள் வங்கிக் கட்டிடம், ( முதலாம் மாடி,) இல. 79, மாரவில வீதி, நாத்தாண்டிய என்ற முகவரியில் பெற்றுக் கொள்ள முடியும்.

தொலைபேசி: 032- 2253300, 032- 2253301,
தொலைநகல்: 032- 2255247.

பதிவாளர்/பிரதி பிஸ்கால்.

மாவட்ட நீதிமன்றம்,
சிலாபம்.

12- 476

# சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள்

## நொத்தாரிசு இறுதிப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு முன்னர் மேற்கொள்ளப்படும் அறிவித்தல்

பிலியந்தலை, சுவாரபொல, கொஸ்பெலென்வத்த, இல.24/28 ஏ என்னும் முகவரியில் வசிக்கும் வராகொட ஆரச்சிகே ஹர்ஷனி லசந்தி ரத்னசூரிய ஆகிய நான், கொழும்பு மாவட்டத்தில் சிங்கள மொழியில் கடமையாற்றும் பிரசித்த நொத்தாரிசு உட்பிரவேசிப்பதற்காக நொத்தாரிசு இறுதிப்பரீட்சைக்கு தோற்றுவதன் பொருட்டு 107 ஆம் அத்தியாயமான நொத்தாரிசுக் கட்டளைச் சட்டத்தின் 7 ஆவது பிரிவின் பிரகாரம் இத்தினம் தொடக்கம் ஒரு மாதத்தின் பின்னர் பதிவாளர் நாயகத்திடம் கோருவதாக அனைவருக்கும் இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன்.

டபிள்யூ. ஏ. எச். எல்.ரத்னசூரிய,
நொத்தாரிசு எழுதுவினைஞர்.

24/28ஏ,
கொஸ்பெலென்வத்த,
சுவாரிபொல,
பிலியந்தலை,
2021.12.08.

12- 436

---

## நொத்தாரிசு தேர்வுக்கான இறுதிப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பம் செய்தமை தொடர்பான அறிவித்தல்

வெயாங்கொட, மாரப்பொல, இலக்கம் 34 என்னும் முகவரியில் வசிக்கும் தியுநுவன் சேனாதீர எனப்படும் நான், கம்பஹா மாவட்டத்தினுள் சிங்கள மொழியினூடாகப் பணியாற்றும் பிரசித்த நொத்தாரிசு ஒருவராக நுழைவதற்காக, 107 ஆம் இலக்க நொத்தாரிசுக் கட்டளையியற் சட்டத்தின் 7 ஆவது பிரிவிற்கமைய இன்று தொடக்கம் ஒரு மாத காலத்திற்குப் பின் இறுதிப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக பதிவாளர் நாயகம் அவர்களிடம் கேட்டுக்கொண்டிருப்பதாக அனைவருக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

டீ. சேனாதீர,
நொத்தாரிசு எழுதுவினைஞர்.

34, மாரப்பொல,
வெயாங்கொட,
2021.12.17.

12- 510

---

## நொத்தாரிசு தேர்வுக்கான இறுதிப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பம் செய்தமை தொடர்பான அறிவித்தல்

வெயாங்கொட, தல்கஸ்மோடே, இலக்கம் 128/D என்னும் முகவரியில் வசிக்கும் வட்டே பதிரன்னெஹெலாகே நேரஞ்சி நிலங்கா பிரேமசந்திர எனப்படும் நான், கம்பஹா மாவட்டத்தினுள் சிங்கள மொழியினூடாகப் பணியாற்றும் பிரசித்த நொத்தாரிசு ஒருவராக நுழைவதற்காக, 107 ஆம் இலக்க நொத்தாரிசுக் கட்டளையியற் சட்டத்தின் 7 ஆவது பிரிவிற்கமைய இன்று தொடக்கம் ஒரு மாத காலத்திற்குப் பின் இறுதிப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக பதிவாளர் நாயகம் அவர்களிடம் கேட்டுக் கொண்டிருப்பதாக அனைவருக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

டபிள்யூ. பீ.என். என். பிரேமசந்திர,
நொத்தாரிசு எழுதுவினைஞர்.

இலக்கம் 128/D,
தல்கஸ்மொடே,
வெயங்கொட.
2021.12.17.

12- 511

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.